Original Suit No. 957/2019 நாள்: 12.06.2026

வா.சா 2 அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பகுதி நேர கணக்காளராக பணியாற்றி வருகிறேன். வாதி எத்தனை வருடமாக பழக்கம் என்றால், 20 வருடமாக பழக்கம். நான் வேறு வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால், இல்லை. நான் K.Z. எக்ஸ்போர்ட் என்ற நிறுவனத்தில் வேலை பார்த்தேனா என்றால் ஆமாம். மேற்படி நிறுவனத்தின் பங்குதாரர் கனகராஜ் இறந்துவீட்டாரா என்றால், ஆமாம்.அந்த பங்குதாரர்களுக்குள் வழக்கு நடந்துவருகிறதா என்றால், ஆமாம். அதில் நான் சாட்சியாக விசாரிக்கப்பட்டேனா என்றால் சாட்சியாகபோட்டுள்ளார்கள். விசாரிக்கவில்லை.

அதில் பங்குதாரர்கள் கையாடல் செய்ததாக வழக்கு என்றால், ஆமாம். தாவா கடனுறுதிச்சீட்டை நான் எழுதினோன என்றால் ஆமாம். எங்கு வைத்து எழுதினேன் என்றால் வாதி கடையில் வைத்து எழுதினேன். தாவா கடனுறுதிச்சீட்டை உருவாக்கும் போதுபிரதிவாதி அங்கு இல்லை என்றால், சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க தாவா கடனுறுதிச்சீட்டை நான்தான் உருவாக்கினேன் என்றால், சரியல்ல. வாதி வீடு கட்டிகொண்டிருந்த விவரம் எனக்குதெரியுமா என்றால் தெரியும். நான் வாதியின் கடை கணக்கு வழக்கை மட்டும் பார்த்தேனா அல்லது வீடு கட்டும் கணக்கையும் சேர்த்து பார்த்தேனா என்றால் கடை கணக்கு வழக்கை மட்டும் தான் பார்த்தேன்.

நான் எத்தனை வருடங்களாக கணக்காளராக வேலை செய்து வருகிறேன் என்றால் 1972 யிலிலுந்து மேற்படி வேலையை பகுதிநேர வேலையாக செய்து வருகிறேன். நான் 50 ஆண்டுகளுக்கு மேலாக கணக்காளராக இருப்பதால் வாதி வங்கியில் இருந்து கடன் வாங்கியதை தெரிந்து தாவா கடனுறுதிச்சீட்டை உற்பத்தி செய்தற்கு வாதிக்கு உடந்தையாக இருந்தேன் என்றால், சரியல்ல. எனது நிரூபண பிரமாணவாக்குமூலத்தில் தாக்கல் செய்துள்ள விவரங்களை யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் அந்த விவரங்கள் நேரடியாக எனக்கே தெரியும். நான் பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள தேதியில் வாதி பிரதிவாதிக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. வாதியின் நிறுவனத்தில் என்னுடன் சேர்த்து 3 நபர்கள் வேலை செய்கிறார்கள். சித்ரா மற்றும் தங்கவேல் ஆகியோர் வேலை செய்கிறார்கள்.

என்னிடம் காட்டப்படும் தாவா கடனுறுதிச்சீட்டில் எழுதியதும், சாட்சியும் என்பதற்கு கீழ் எதுவும் எழுதப்படவில்லை என்றால், ஆமாம். சாட்சி என்ற இடத்தில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால், ஆமாம். எழுதியதும், சாட்சியுமான என்ற இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் ஆமாம். தாவா கடனுறுதிச்சீட்டை யார் எழுதினார்கள் என்று வா.சா.ஆ.1 யில் குறிப்பிடப்படவில்லை என்றால், ஆமாம். உண்மையாக கடன் வாங்கியிருந்தால் தாவா கடனுறுதிச்சீட்டில் எழுதியவரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும்எ ன்றாலும்,அவ்வாறு குறிப்பிடதாதிலிருந்துஅது போலியான தாவா கடனுறுதிச்சீட்டு என்று தெரிய வருகிறது என்றால், சரியல்ல.

பிரதிவாதி வாங்காத கடனுக்கு நான் பொய் சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றால், சரியல்ல. எழுதியதும், சாட்சியும் என்ற இடத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன்என்று சொல்லப்பட்டுள்ள எனது பிரமாண வாக்குமூலம் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றால், சரியல்ல. எழுததாக கடனுறுதிச்சீட்டை எழுதியதாக சொல்லி, சாட்சியம் அளித்துளள தாவா கடனுறுதிச்சீட்டு வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA

முதன்மை சார்பு நீதிபதி,

கரூர்.